கெக்கிராவ பிரதேச சபையி - 2022

---------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கெக்கிராவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தலாவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

0

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சித் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட பொருள் நன்கொடை ரூபா.308,000 காசுப் பாய்ச்சல் கூற்றில் மூலதன மானிய பெறுகை எனவும் முதலீட்டு செயல்பாடுகளின் கீழ் மூலதன சொத்துக்கள் கைப்பற்றுதல் எனவும் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | பணக் கொடுப்பனவுகள் மற்றும் வரவுகள் மட்டும் காசுப் பாய்ச்சல் கூற்றில் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 24 ஆம் திகதி புதிய அலுவலக கட்டடத்திற்கு தளபாடங்கள் பெற்றுக் கொண்டதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா.1,556,200 செலவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மீளாய்வாண்டுக்கு உரிய சொத்துக்கள் மற்றும் வருமானங்கள் சரியாக இனம் காணப்படுதல் வேண்டும். |
| (இ) | நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் குறித்த வட்டி ரூபா.3,493,610 தொகைக்காக 5 சதவீத தடுத்து வைத்த வரியான ரூபா.174,680 தொகை செலுத்தப்பட வேண்டிய செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மீளாய்வாண்டுக்கு உரிய செலவுகள் மற்றும் நடைமுறை சொத்துக்கள் சரியாக இனம் காணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டுக்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா.34,055 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் ஊழியர் கடன் வட்டி ரூபா. 565,329 செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து பெற்ற காசுப் பாய்ச்சலாக காட்டப்படுவதற்குப் பதிலாக முதலீட்டு செயல்பாடுகளில் பெற்ற காசுப் பாய்ச்சலாக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | செயல்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் உள்ள நிதிப் பாய்ச்சல்கள் சரியாக இனம் காணப்படுதல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் வைப்பு செய்யப்பட்ட ரூபா.59,745,000 தொகையான நிலையான வைப்பு மற்றும் மீளப் பெறுகை ரூபா.46,261,824 தொகை தொடர்பில் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயல்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | முதலீட்டு செயல்பாடுகளின் கீழ் உள்ள நிதிப் பாய்ச்சல்கள் சரியாக இனம் காணப்படுதல் வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் இனம் காணப்பட்ட ரூபா.40,000,000 பெறுமதியான காணி நிலையான சொத்துக்கள் ஏட்டில் காட்டப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக்கொள்ளப்படுகின்து என்பது. | அட்டவணைகள் நேரொத்த அறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்கு உரிய குறிப்பு 19 இற்கு அமைய குறுகிய காலத்தில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியவற்றின் குறைவு ரூபா.14,288,839 ஆக இருந்த போதிலும் காசு பாய்ச்சல் கூற்றுக்கு அமைய அது ரூபா.14,059,824 ஆக இருந்ததால் ரூபா.229,015 வித்தியாசம் காணப்பட்டது. | ஆரம்ப மீதி சரிப்படுத்தலுக்கு அமைய வித்தியாசம் இல்லை என்பது. | -மேற்படி- |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா.323,178,124 பெறுமதியான கட்டடங்கள், வீதி மதகு மற்றும் பாலங்கள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் ஏடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 182 ஆம் பிரிவு | சபையின் சொத்துக்களை வருடாந்த குத்தகைக்கு வழங்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய வருமானம் ரூபா.968,981 மாகாண சபை அமைச்சரின் அனுமதி இன்றி அறவிடப்படும் மீதியாக 2022 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டிருந்தது. | நீக்குவதற்கான முறையான அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | முறையான அனுமதியினைப் பெற்றுக் கொண்டு மட்டுமே நீக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதி இடப்பட்ட அரசு நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 09/2009 இன் iv ஆம் பந்தி | விரல் அடையாள இயந்திரத்துக்கு அமைய வரவு மற்றும் வெளியேற்ற நேரங்கள் உறுதிப்படுத்தப்படாது மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.19.526,542 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.25,931,467 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான வழி | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2021 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீத வரி மற்றும் வரி | 8,346,305 | 8,310,096 | 7,967,449 | 5,834,240 | 8,198,230 | 8,158,681 | 7,224,176 | 5,491,593 |
| (ii) | வாடகை | 16,545,100 | 11,559,206 | 12,244,842 | 6,060,675 | 13,384,960 | 10,622,672 | 8,566,737 | 6,746,311 |
| (iii) | அனுமதி பத்திர கட்டணம் | 5,899,650 | 4,675,015 | 4,920,215 | 345,000 | 3,615,970 | 2,720,973 | 2,687,743 | 590,200 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 23,376,000 | 49,893,169 | 107,199,470 | 5,835,219 | 26,055,180 | 27,052,101 | 48,887,724 | 63,141,520 |
| | | 54,167,055 | 74,437,486 | 132,331,976 | 18,075,134 | 51,254,340 | 48,554,427 | 67,366,380 | 75,969,624 |

### 2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா.4,551,829 ஆகும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய நிலுவை வீத வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் வணிக மற்றும் கைத்தொழில் நிலுவை வரி ரூபா.264,650 ஆகும். | நிலுவைத் தொகையின் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது என்பது. | மிகுதி நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | ஏடுகளுக்கு அமைய 1997 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்திற்கு உரியதான ரூபா.773,887 கேளிக்கை வரி அறவிடப்பட வேண்டி இருந்தது. | இந்த சினிமா அரங்கு அமைந்துள்ள காணி இன்னொருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் சினிமா அரங்கின் உரிமையாளர் மரணமடைந்து விட்டதால் உள்ளுராட்சி திணைக்களத்திடம் இருந்து ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளது. | பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 05 வருடத்திற்கு ஒரு தடவை வீதவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2004 ஆம் ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சி திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | புதிய மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதைத் துரிதப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| (i) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டதனால் அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா.2,187,515 அறவிடப்பட்டு இருக்கவில்லை. | அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | அறவிடுதலைத் துரிதப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் கடை வாடகை ரூபா.1,594,800 ஐயும் மற்றும் வியாபார குடில் வாடகை ரூபா.48,000 ஐயும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | -மேற்படி- |
| (இ) | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| | 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் 03 நிறுவனங்களுக்கு உரியதாகப் பெற்றுக் கொள்ள வேண்டிய வேண்டிய விளம்பரப் பலகை வருமானம் ரூபா.145,000 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை விளம்பரப் பலகைக் கட்டணங்களில் ஒரு பகுதி செலுத்தப்பட்டுள்ளது. | மிகுதி நிலுவை விளம்பரப் பலகைக் கட்டணம் அறவிடப்படுதல் வேண்டும். |
| (ஈ) | **ஏனையவை** | | |
| | மாகாண சபை பிரதான செயலாளரிடம் இருந்தும் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடம் இருந்தும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா.1,487,088 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா.4,348,131 உம் கிடைத்திருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அறவிடுதலைத் துரிதப்படுத்துதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் மற்றும் கிளை வீதிகள் தொடர்பான காரணிகளை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நன் நடத்தை, வசதிகள் மற்றும் நலன் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டி இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கெக்கிராவ, மரதன்கடவல, பண்டாரபொத்தான, உல்பத, அழுத் பலலுவெவ, கணேவல்பொல, கொல்லன்குட்டிகம மற்றும் மடாடுகம ஆகிய இடங்களில் இறைச்சிக் கடைகள் நடாத்தப்பட்டு வந்துள்ள போதிலும் அந்த இறைச்சிக் கடைகளுக்குத் தேவையான கால்நடை அறுக்கும் கூட வசதிகள் சபையினால் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கால்நடை அறுத்தல் கூட சட்டத்தின் பிரகாரம் செயல்படுதல் வேண்டும். |
| (ஆ) | 1988 ஓகஸ்ட் 23 ஆம் திகதி இடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்ட வர்த்தமானி அறிவித்தலின் 32 துணை சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகார பிரதேசத்தில் உள்ள மாட்டு இறைச்சிக் கடைகளில் விற்பனை செய்யப்படும் மாட்டு இறைச்சிக்கு சபையின் இலச்சினையைப் பயன்படுத்துவதற்காக 01 கிலோ கிராமிற்கு ரூபா.10 இற்குக் கூடாத கட்டணத்தினை அறவிடுவதற்கும் மற்றும் அறுக்கப்படும் விலங்குகளின் விபரங்களை உரிய படிவத்தின் பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | கட்டணம் அறவிடப்படுவதற்கும் விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வடிகால் கழிவுகளை அகற்றுவதற்கு சபையினால் இடமொன்று தயார்படுத்தப்படாததால் வடிகால் வாகனத்தினால் பெற்றுக் கொள்ளக்கூடிய வருமானத்தினை சபை இழந்திருந்தது. | - நிதி ஒதுக்கீடு கிடைத்ததன் பின்னர் இடத்தினை தயார்படுத்துகின்றேன். | தேவையான வழிமுறைகளைத் துரிதப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | மரதன்கடவல நகரத்தில் இருக்கும் அனுமதியற்ற நிர்மாணிப்புகளை அகற்றுவதற்கும், மடாடுகமவில் இருக்கும் அனுமதியற்ற பன்றி இறைச்சி விற்பனை நிலையத்தினை அகற்றுவதற்கும் சபையினால் கவனம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை. | - முறைப்படுத்தப்பட்டு கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேவையான வழிமுறைகளைத் துரிதப்படுத்துதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சாயா ஊற்று அமைந்துள்ள சபைக்கு சொந்தமான களஞ்சிய தொகுதி ரூபா.10,000 இற்கு மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு சபை தீர்மானித்திருந்த போதிலும் அதனை வாடகைக்கு வழங்குவதற்கு 2022 ஆம் வருடத்திலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் மாகாண கலாசார திணைக்களத்தினால் அறநெறி பாடசாலை மற்றும் மத வழிபாட்டுத் தலங்களுக்கு நன்கொடையாக வழங்கியிருந்த ரூபா.100,000 குறித்த செயல்களுக்கு பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | இந்தப் பணத்தைக் குறித்த காரணத்திற்காகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். | தேவையான வழிமுறைகளைத் துரிதப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | 2020 ஜுன் மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரையில் அமைய ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் போது அறவிடப்பட்ட அரச சேவை சேமலாப நிதிக்கான அங்கத்துவப் பணம் ரூபா.173,314 பொது வைப்பு கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அங்கத்துவப் பணத்தினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | அதிகாரப் பிரதேசத்தில் புதிய நிர்மாணிப்புகள், மீள இணைத்தல், அகற்றுதல் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தற்காலிக மதிப்பீட்டிற்கு அல்லது வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு இருப்புக் கணக்கெடுப்பு மூலம் அகற்றுவதற்கு முன்மொழியப்பட்டு இருந்த ரூபா.272,625 பெறுமதியான பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அகற்றுதல் விரைவில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை பதவி அணியில் 05 இரண்டாம் நிலை பதவிகளில் 10 வெற்றிடங்களும், 06 முதன்மை தர பதவிகளில் 19 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் 23 அமைய தொழிலாளிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | இது தொடர்பில் குறித்த நிறுவனம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. | வெற்றிடத்தை நிரப்புவதற்கும் அமயத் தொழிலாளர் பதவிகளை ஒழுங்கு படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.249,650 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |